[திரு. ரா. பெரியசாமி] [1980 ஜூலை 7

[பிற்பகல் 1—30]

பழைய முறைப்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் செய்வது மாதிரி செய்யமுடியவில்லை. ஆகவே, அவர்களிடமே அந்தப் பொறுப்பை திருப்பி ஒப்படைக்கும்படி கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியிலே தா. பேட்டை பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட பாப்பாப்பட்டிக்கு அருகில் உள்ள தலைமலையில் இருந்துவரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி, அங்கே ஒரு ஏரியைக் கட்டவேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். அங்கே அதிகாரிகள் எல்லாம் வந்து பார்த்துப் போயும்கூட, திட்டம் தீட்டப்பட்டும் கூட ஏரி கட்டப்படாமல் இருக்கிறது. 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலிலேயும் வெள்ளத்திலேயும் அங்கே இருக்கின்ற கிணறுகள் பாதிக்கப்பட்டு ஆற்றின் கரைகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகள் இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கிறன. ஆகவே, அந்தக் கரைகளைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

34. பொன்மேனி (மதுரை கோட்டம்) சோதனைச் சாவடியினை தற்பொழுது அது அமைந்துள்ள இடத்திலிருந்து மாற்றுவது தொடர்பாக வருவாய்த் துறையில் 1970 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் தேதியன்று வெளியாகி 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III, பக்கம் 471—ல் (ஆங்கிலத்தில்) வெளியான III/116 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் தேதியிடப்பெற்ற 380 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

1980 ஜூலை 7]

35. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் தேதியிடப்பெற்ற 83-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

36. உலோகத்தினாலான உலோக பீப்பாய் மீது விற்பனை வரி விதிப்பது தொடர்பாக வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8 ஆம் தேதியன்று வெளியாகி 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு 1, பக்கம் 234-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II (1)/வவசஅ/672/79 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5 ஆம் தேதியிடப்பெற்ற 1980ஆம் எண் அறிவிப்பில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

37. வருவாய்த் துறையின் 1971 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 ஆம் தேதியன்று வெளியாகி 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு I பக்கம் 1128—ல் (ஆங்கிலத்தில்) வெளியான II (1)/5004/1971 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 272 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1939) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.